அமைக்கப்பட்டிருக்கக்கூடிய முத்தரப்புக் குழுக்கள் அவற்றின் மாதாந்திரக் கூட்டங்களை நடத்துவதற்கும் அதன் மூலமாக உரிய ஆய்வுகளைச் செய்து, அறிக்கைகளைப் பெற்று, அரசு அமைச்சரவையில் ஆய்வு செய்வதும், அந்த ஆய்வுகளின் அடிப்படையில் இந்தத் தீர்ப்பாயம் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான தொடர் நடவடிக்கைகளை உறுதிப்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தரப்புக் குழுக்கள் என்பது, வேறு; இந்த தீர்ப்பாயம் என்பது வேறு. முத்தரப்புக் குழுக்கள் என்பது, அந்தந்த மாவட்டங்களில் உள்ள மூடப்பட்டிருக்கின்ற ஆலைகளைத் திறப்பதற்குரிய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அரசுக்கு அதனுடைய அறிக்கையைத் தந்து, அதன் மூலமாக ஆலைகளைத் திறப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அமைக்கப்பட்டவைதான் இந்த முத்தரப்புக் குழுக்கள். அந்தக் குழுவின் அறிக்கையை விரைவாக அரசுக்குத் தர வேண்டும் என்றும், மாதம் ஒரு முறையாவது அந்தக் குழு கூடி, அரசுக்கு அறிக்கையை வழங்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இப்போது அறிவுரைகள் வழங்கியிருக்கிறது. இந்தப் பஞ்சாலைத் தொழிலாளர்கள் சம்பந்தமாக, இந்தப் பிரச்சினைகள் சம்பந்தமாக தொடர்ந்து தொடர் நடவடிக்கைகளை, இந்தத் தீர்ப்பாயத்தினுடைய தலைவர் நீதிபதி திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் எடுத்து வருகிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *10*, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

10—

சேமிப்புக் கிடங்கு

•1582—திரு. கே. ஆறுமுகம்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2003 ஜனவரி 28]

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றிய வளாகத்தில் விதைகளைச் சேமிக்கும் புதிய கிடங்கு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பு எவ்வளவு?

(இ) இத்திட்டம் எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றிய வளாகத்தில் விதைகள் சேமிக்கும் புதிய கிடங்கு அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று விவசாயிகளினுடைய வாழ்க்கை கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கிறது. வறட்சியினாலும், பாசனத்திற்குத் தண்ணீர் இல்லாததினாலும் விவசாயம் செய்த பயிர் முழுவதும் காய்ந்து வீணாகிவிடுகிறது. அதைப்போலவே, சில நேரங்களில் விவசாயிகள் தரமான விதைகளைப் பயன்படுத்தாத காரணத்தாலே விவசாயம் செய்த பயிர் முழுவதும் நாசமாகிவிடுகிறது. உதாரணத்திற்கு, பருத்தி பயிரிட்ட விவசாயி, அதை நன்றாக வளர்த்து, அது காய்க்க வேண்டிய நேரத்தில் முழுமையாகக் காய்க்காமல், வெறும் செடியாகவே இருக்கின்றபோது, அந்த விவசாயியின் வாழ்க்கை கேள்விக்குறியாகி, ஒருசில குடும்பங்கள் பலியாகின்ற நிலையை எல்லாம் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில் இப்போது தரமான விதைகளை, நேர்த்தி செய்யப்பட்ட விதைகளைக் கொடுப்பது நம்முடைய கடமையாக இருக்கிறது. விவசாயத்தையே முழுமையாக நம்பி வாழக்கூடிய எவ்விதத் தொழில் வசதியும் இல்லாத காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலே விதைப் பண்ணை வளாகம் அமைக்க அரசு முன்வருமா? அது நடப்பாண்டில் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2003 ஜனவரி 28

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் விதைகளை சேமிக்கவும், அவற்றை விவசாயிகளுக்கு வழங்கவும் கிட்டத்தட்ட 200 மெட்ரிக் டன் கொள்ளளவு உள்ள விதைகள் இருப்பு மையம் இருக்கிறது. அத்துடன் அந்த ஒன்றியப் பகுதியிலேயே ஒரு துணை மையமும் இருக்கிறது. பருவ காலங்களுக்கேற்ப இடுபொருட்கள் அதன் மூலமாக வழங்கப்படுகின்றன. தரமான விதைகள் அந்த மையங்களின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்களின் மூலமாக இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. லட்சுமணன், இது திருக்கழுக்குன்றம் பற்றியது.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதைகள் என்று பொதுவாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. விதைகள் என்று சொல்கிறபொழுது, சான்றிதழ் பெற்ற certified seed-ஐப் பற்றிச் சொல்கிறார்களா அல்லது Parent Material- ஐச் சொல்கிறார்களா என்பதை தங்களின் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சான்றிதழ் பெற்ற விதைகளைத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 11, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

11—

நெற்களங்கள்

***17296—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் அனைத்துக் கிராமங்களிலும் அறுவடை நெற்களங்கள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?